செய்தி வெளியீடு எண் : 2216 நாள் : 06.11.2023

# செய்தி வெளியீடு

கல்வியே வளர்ச்சியின் முதுகெலும்பு. அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சமூகத்தின் பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வசதியை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ / மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் 1350 பள்ளி, கல்லூரி விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 1271 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 79 விடுதிகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது.

இதன்படி 2023-24 ஆம் ஆண்டு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் மூன்று விடுதிகளுக்கு ரூபாய் 16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக கீழ்க்கண்ட மூன்று விடுதிகளில் மொத்தம் 250 மாணவ/ மாணவியர் தங்கும் வகையில் ரூ.16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

1. பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் 100 மாணவிகள் தங்கும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதி.

2. அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டியில் 50 மாணவர்கள் தங்கும் வகையில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி.

3. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, கோட்டைமேட்டில் 100 மாணவிகள் தங்கும் வகையில் சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in